# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (14.04.2015 முதல் 18.04.2015)

***அறிக்கை எண் 28/2015*** ***தேதி: 13.04.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

*தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செஆகவும் பதிவானது. இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை காணப்பட்டது.*

***எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு ( 14.04.2015 முதல் 18.04.2015)***

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 74 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 முதல் 52 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 3 கி.மீ முதல் 5 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14.04.15 | 10 | 35 | 22 | 6 | 74 | 50 | 4 | தென் மேற்கு |
| 15.04.15 | 4 | 35 | 22 | 5 | 72 | 52 | 5 | வட கிழக்கு |
| 16.04.15 | 4 | 35 | 22 | 6 | 74 | 50 | 4 | வட கிழக்கு |
| 17.04.15 | 4 | 36 | 23 | 5 | 72 | 52 | 5 | தெற்கு |
| 18.04.15 | 6 | 36 | 23 | 6 | 74 | 50 | 3 | வட கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடை மழையை சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக கோடை உழவு செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் எள் பயிரடப்பட்ட வயலில் மழை தண்ணீர் வடிய வடிகால் வசதி செய்யவும். மேலும் பருத்திக்கு நல்ல வடிகால் வசதி செய்வதன் மூலம் சப்பைகள் கீழே உதிர்வதை தடுக்கலாம்.
- ✓ மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் எல்லா இறவை பயிர்களுக்கும் குறிப்பாக தாழ்வான பகுதிகளில் தக்க வடிகால் வசதி செய்யவும்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை கம்பு விதைப்பை மேற்கொள்ளலாம். மேலும் விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.
- ✓ கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை மழை நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் கால் நடை மற்றும் கோழி கூடாரங்களின் அருகில் தண்ணீர் தேங்காமல் வடிகால் வசதி செய்வதன் மூலம் கொசு இனப்பெருக்கத்தை தடுக்கலாம்.

**குறுஞ்செய்தி**

- ✓ கோடை மழையை சேமிக்கும் வகையில் சரிவுக்கு குறுக்காக கோடை உழவு செய்யவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**